முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை!

அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

## எதிர்காலம் குறித்த

## இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

**பிலவ வருடம் வைகாசி மாதம் 23ம் திகதி முதல் வைகாசி மாதம் 30ம் திகதி வரை**

**(06.06.2021 ஞாயிறு முதல் 13.06.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கந்தமகா சக்தியே கலியின் மீட்பே
   கண்கண்ட தெய்வமே ஞானச்சுடரே
   செந்தூர்வேலனே உமை போற்றி
   செப்பிடுவேன் அகத்தியனும் வார ஆசி
2. ஆசியதும் இந்தியா தமிழகத்தில்
   அறிவிப்பேன் பிலவ விடை திங்களில்
   பேசிட மூவேழீர்திகதி மேல் முப்பான்திகதி வரை
   புகலுவேன் நடக்கும் நிகழ்வாக எதிர்காலபலன் குறித்தஆசி
3. ஆசிதனை அரங்கஞானிகேட்க உரைப்பேன்
   அச்சுறுத்தும் நச்சுக்கிருமி அல்லல்
   நேசமிலா ஆளுமைகளை நசித்து
   நிலமதனில் உயிர்பலி கூட்டிவர
4. வருகின்ற இந்த அவலம் அகல
   வல்லமையாக நடுவண் செயல்படா
   தருகின்ற மாநில வருவாய்கள்தனை
   தவறாக முடக்கி உதவி செய்யாவிடில்
5. செய்யாவிடில் தலைமைக்கு சிக்கலும்
   செயல்வழி உலகளவில் சிறுமையும்
   அய்யமுற கண்டடைய நேரிடும்
   அவசியம் மாநில உரிமைகட்கு வழிவிட்டு

6. வழிவிட்டு உகந்த ஆறுதலாக
வலிய உதவிதனை செய்திட
அழிவினின்று இந்தியா தமிழகம்
அனைத்து வகையிலும் மீள நேரும்

7. நேருமைபட தமிழக ஆளுமை
நீதிமான்கள் துணைபட செயல்பட
வருவாய்கள் உதவிநிதியாகப் பெருகி
வந்த பேரிடரை வெல்லும் சக்திகிட்டும்

8. கிட்டவே மக்களும் ஒத்துழைப்பு
குறைவின்றி ஆளுமைக்கு தந்துவர
கட்டமான பேரிடரும் முழுமைபட
கண்டுரைப்பேன் விலகி பாதுகாப்பாகமாறும்

9. மாறுதலை இந்தியா தமிழகம்
மார்க்கமுடன் சடுதி கண்டடைய
ஆறுமுக அரங்கஞானி தருமவழியை
ஆளுமைகள் ஏற்றுவர நடந்தேறும்

10. நடந்தேறும் இன்னல் யாவும் விலகி
நன்மைதரும் ஞான ஆட்சியாக
தடையின்றி சடுதி மாற்றம்பெறும்
தமிழகம் இந்தியா தலைநிமிரும்

வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் வைகாசி மாதம் 23ம் நாள் **06.06.2021** ஞாயிற்றுக் கிழமை முதல் வைகாசி மாதம் **30**ம் நாள் **13.06.2021** ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகள்.

கந்த மகாசக்தியே துன்பம் மிக்க கலியுகத்தின் கோர பிடியினில் இருந்து மக்களைக் காத்திடவே வந்துதித்த கலியுக மீட்பே உலக மக்களின் கண்கண்ட கலியுக தெய்வமே ஞானமே வடிவாகிய ஞானச்சுடரே, திருச்செந்தூர் வேலவனே முருகப்பெருமானே ஞானத் தலைவனே உம்மை போற்றி துதித்து இந்திய தேசத்திலும் தமிழகத்திலும் பிவல வருடம் வைகாசி மாதம் **23**ம் நாள் **06.06.2021** ஞாயிற்றுக்கிழமை வைகாசி **30**ம் நாள் **13.06.2021** ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள

காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அரங்கமகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தற்சமயம் உலகையே அச்சுறுத்தி உயிர்பலிகளை அதிகமாக உண்டாக்கி வருகின்ற இயற்கை பேரிடரான நச்சுக்கிருமியின் துன்பங்கள் பாகுபாடு இல்லாமல் மக்களையும், ஆட்சியர்களையும் தாக்கி உயிர்பலி அதிகமாகி வருகின்ற படியால் இந்தவித நச்சுக்கிருமி அல்லல்கள், அவலங்கள் எல்லாம் நாட்டை விட்டு அகல வேண்டுமாயின் நாட்டை ஆளும் மத்திய அரசு விரைந்து செயல்பட்டு மாநில அரசுகள் மீது பாகுபாடு காட்டாமல் மாநில வருவாய்களை தடைசெய்யாமல் பொருளாதாரத்தை அளிப்பதோடு தவறான வழிகளில் மாநில அரசுகள் அதனதன் வருவாய்களை அவசர நிலைக்கு பயன்படுத்தாமல் தவறான செயல்களுக்கு பயன்படுத்துவதையும் தடுத்து மக்களை காப்பதில் செலுத்திட வழிவகை செய்திடல் வேண்டும். மத்திய அரசும் வேறு வகையில் செல்லும் பொருளாதாரத்தை நிறுத்தி மக்களை காக்க முழுவீச்சாய் செயல்பட வேண்டுமப்பா.

அவ்வாறு விரைந்து நோய் தொற்றில் இருந்து மக்களை காக்கும் விதமாக செயல்படாவிட்டால் தலைமைகளுக்கு சிக்கல் உண்டாகும், உலக அரங்கில் இந்திய தேசம் தலைகுனியும் நிலையும் உண்டாகும்.

ஆதலால் அவசியம் மத்திய அரசு மாநில உரிமைகளுக்கு வழிவிட்டு செயல்படுவதோடு மத்திய அரசு தானே முன்வந்து மாநில அரசுகளின் தேவைகளை பூர்த்தி செய்திட வேண்டும். அவ்வாறு செய்திட்டால் இந்திய தேசத்தை அழிவினில் இருந்து விரைந்து காப்பதோடு எல்லா வகையான துன்பங்களில் இருந்து மீட்சி அடையலாம்.

தமிழக ஆட்சியர்கள் தர்மவான்கள், நீதிமான்கள் துணையுடன் செயல்பட்டு வர மாநில வருவாய் பெருகி, மக்களின் உதவிகளும் பெருகி தமிழகத்தை தாக்கும் பேரிடரை எதிர்கொள்ளும் வல்லமையும் பெருகிடும். அதுமட்டுமல்லாது அரசின் மக்களை காக்கும் செயல்பாட்டிற்கு முழு ஒத்துழைப்பினை தந்து நடந்திட பெருந்துன்பத்தை உண்டாக்கும் பேரிடரும் தமிழகத்தை விட்டு முழுமையாக விலகி தேசம் பாதுகாப்பான தேசமாக மாறிடும்.

நாட்டினில் ஆபத்தில்லாத நிலை விரைந்து உண்டாக வேண்டுமாயின் நாட்டினை வழிநடத்தி ஆட்சி செய்வோர் அனைவரும் தர்மத்தின் பாதையை கூறும் ஆறுமுக அரங்கமகா தேசிகரின் ஜீவதயவே அடிப்படையாகக் கொண்ட தூய ஞான நெறிகளை, சன்மார்க்க நெறிகளை ஏற்று கடைபிடித்து வர துன்பங்கள் விரைந்து விலகும்.

நாட்டினில் துன்பமெலாம் விலகி ஆளும் ஆட்சி அறிவுமிகுந்த ஞானிகளின் துணையை பெற்ற ஞான ஆட்சியாக விரைந்து மாறிடும். தமிழகமும் இந்திய தேசமும் பாதுகாப்பான தேசமாக தலைநிமிர்ந்து நிற்குமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–